**செய்தி வெளியீடு எண்:088** **நாள் : 09.02.2016**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சென்னை, தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 5 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்வி, நிருவாகம் மற்றும் ஆய்வறிஞர் விடுதிக் கட்டடங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 3 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 3 கோடியே 73 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் கட்டடங்கள், ராமேஸ்வரத்தில் மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் பாரதரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவிடத்தில் 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கு மற்றும் நவீன பயணியர் நிழற்குடை ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும் தூய்மையும் மிக்க மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை மிக்க மொழியாகவும், விளங்குகின்ற தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதிலும், அதனை உலகெங்கும் பரப்புவதிலும் தமிழ் வளர்க்கும் பணிகளுக்காகப் பல திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் 5 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 30,000 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன், மரபுசார் தமிழ்க் கலைகளுடன் நிறுவப்பெற்றுள்ள கல்வி, நிருவாகம் மற்றும் ஆய்வறிஞர் விடுதிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில், நூலகக் கட்டடத்தினை மையமாகக் கொண்டு 278 மீட்டர் ஆரத்தில் ‘ **த,** ‘ **மி,** ‘ **ழ்,** ‘ **நா,** ‘**டு,** என்ற வடிவில் 5 புலக் கட்டடங்கள் அமைப்பதற்கான பெருந்திட்ட வரைபடத்தின் அடிப்படையில், 3 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **‘மி’** வடிவ அறிவியல் புலக் கட்டடம்;

மதுரை தல்லாகுளம் பகுதியில் உலக தமிழ்ச் சங்கக் கட்டுப்பாட்டில் சங்கத் தமிழரின் வாழ்வியலைக் கண்முன் நிறுத்தும் வகையில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம்;

என மொத்தம் 9 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கல்வி, நிருவாகம் மற்றும் ஆய்வறிஞர் விடுதிக் கட்டடங்கள், அறிவியல் புலக் கட்டடம், சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சீனம், அரபு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகள் நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், சீனம், அரபு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட அவ்வையின் ஆத்திசூடி நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் மேன்மைக்கென தன்னலமற்ற சேவை ஆற்றிய தலைவர்கள், தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று தம் இன்னுயிரை அர்ப்பணித்த தியாக சீலர்கள் ஆகியோரின் நினைவாக தமிழக அரசு சிலைகள் அமைத்து சிறப்பித்து வருகிறது. அந்த வகையில், குமரி மாவட்டத்தை

தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்றும்; தலைசிறந்த தமிழ்க் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரை போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்றும்; தாய்மொழி தமிழுக்காக தன் உயிரைத் துச்சமென மதித்து உயிர் நீத்த மொழிப்போர் தியாகி கீழப்பளுவூர் திரு. சின்னச்சாமி அவர்களின் நினைவைப் போற்றி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அன்னாரின் சிலை அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் சிலை, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் 10 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் சிலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கம்பரசம்பேட்டையில் 8 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மொழிப்போர் தியாகி கீழப்பளுவூர் திரு.சின்னச்சாமி அவர்களின் சிலை, மேலும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 7 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் சிலைகளையும்;

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாரதரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவுச் சிலை மற்றும் பொன்விழா முகப்பு வளைவு, 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம்;

அரசுப் பொருட்காட்சிக்கான தளவாடப் பொருட்களை பாதுகாப்பான முறையில் வைப்பதற்காக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சேலம் மாவட்டம் – கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில், 12,200 சதுர அடி கட்டட பரப்பளவில், நிலத்தினை சுற்றி சுற்றுச்சுவர், ஆழ்துளை குழாய் கிணறு, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி,

காவலர் தங்கும் அறை, கழிப்பறை ஆகிய வசதியுடன் 1 கோடியே 23 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசுப் பொருட்காட்சி கிடங்கு;

என மொத்தம் 3 கோடியே 73 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அமைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் பாரதரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவிடத்தில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கு மற்றும் நினைவிடத்தின் அருகில் 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.த.உதயசந்திரன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: **9.2.2016**